Volume: 01 Issue -01:
January to March 2026

ISSN :
DOI :

# கே பாலச்சந்தர் திரைப்படத்தில் பெண் ஆளுமை

சு. கனகவேல்பாண்டி முனைவர் க. கமலா

Date of submission : 20-04-2026 Date of acceptance : 24-04-2026
Date of Publication: 30-04-2026
Corresponding auther's Name :Dr.S.Priya
Email : spriya.sl@vistas.ac.in
Pages : 38 - 40

**முன்னுரை**

"ஆளுமை" என்பது தன்னைத்தானே ஆள்வதும், பிறரை ஆளும் வல்லமை கொண்டிருப்பதும் "ஆளுமை" எனப்படும் இடத்திற்கும், சூழலுக்கும் ஏற்ப ஒருவர் நடந்து கொள்ளும் பண்பே "ஆளுமை" எனப்படும் இந்தப் பண்பு பிறவியிலேயே வளர ஆரம்பிக்கிறது எங்கேயும் எப்போதும் எந்த விசயத்திற்கும் சரியான தொரு தீர்வை அமைப்பதும், இத்தீர்ப்பை அனைவரும் ஏற்கும் வண்ணம் செய்து முடிக்கும் திறமையும் "ஆளுமை" ஆகும் தன்னம்பிக்கையையும், தலைமைப்பண்பும் கொண்டிருப்பது" ஆளுமைக்கு முக்கிய ப் பண்பாகும்.

**பெண் ஆளுமைத் திறன் :**

ஆண் ஆதிக்கம் நிறைந்த உலகில் பெண்களுக்கு ஆளுமை வளர்ச்சி என்பது மிக அவசியமான ஒன்றாகும். பெண்கள் கல்வி அறிவும் பல்வகைத்திறன்களும் கொண்டு விளங்க வேண்டும். பெர்சினாலிட்டி டெவலப்மெண்ட் எனப்படும் ஆளுமைத்திறன் ஆண்- பெண்பாகுபாடின்றி அமையவேண்டும் நடை, உடை, தோற்றப் பொலிவு, மற்ற நபர்களை அணுகும் விதம், நாகரீகமாக நடந்து கொள்ளும் விதம் என பெண்கள் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் பெண் தன்னையும், தன் பலன்களையும் உணரும்போது தான், பெண் விடுதலை சாத்தியமாகிறது என்பதை ஜெயந்தி சாம்சன் என்பவர் "தேடல் வலி" என்னும் கவிதையில் "பெண்ணே உன்னை நீயே உணராத வரையில் எதற்குமே நீ உரிமை கொள்ள முடியாது." எடுத்துக் காட்டுகிறார் இன்றைய சூழலில் பெண்களுக்கு கல்வி தன்னம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கிறது தன் பலம் உணர்ந்து நிலையில் விழிப்புணர்வுற்ற பெண்ணின் குரலாய் ஒலிக்கின்றன ஏட்டினை பெண்கள் தொடுவது பாவம் என்ற நிலை மாறி பெண்கள் கல்வி கற்று பல துறைகளில் முன்னேறியுள்ளார் உலகில் பல கல்பனா சாவ்லா க்கள் வளர்ந்து வருகின்றனர்.இன்று அத்துனைத்துறைகளிலும் பெண்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்த தாகக் கருதப்படுகிறது பெண்கள் படித்து பட்டம் பெற்று தன் சீரிய அறிவாற்றலால் உலகை ஆளும் வல்லமை மிக்கவர்களாக முன்னேறியுள்ளனர்

கே பாலச்சந்தர் திரைப்படத்தில் பெண் ஆளுமை:

கே பாலச்சந்தர் என்பவர் தமிழ்த்திரைப்பட இயக்குனர் ஆவார். இவர் மேடை நாடகத் துறையில் இருந்து திரைத்துறைக்கு வந்தவர். 1987-ஆம்ஆண்டுஇந்திய அரசால் பத்மசிறீ பட்டம் வழங்கப்பட்டது. 2011-ல் தாதாசாகெப் பால்கே விருது வழங்கப்பட்டது. 2005-ல்சத்தியபாமா பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது 1995-ல் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. எம். ஜி. ஆர் விருது, கலைஞர் விருது என திரைத்துறையில் பல விருதுகளை வென்றுள்ளார். திரைத்துறையில் பல புதுமைகளைப் படைத்தார். அந்தந்த காலகட்டத்தில் சமுதாயத்திற்கு எது தேவையோ அதனை மையமாகக் கொண்டு திரைக்கதை அமைப்பதில் வல்லவர். தமிழ் சினிமாத்துறையின் பிதா மகனாகப் போற்றப்பட்டவர் இயக்குனர் சிகரம் கே பாலச்சந்தர் ஆவார்.

**சு. கனகவேல்பாண்டி முனைவர்பட்டஆய்வாளர்.**
**முனைவர்.க.கமலா பேராசிரியர்,**
**தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம்,**
**சென்னை - 600 117.**

பெரும்பாலும் பெண்ணியம் சார்ந்தவை. தமிழ்த்திரைப்படத்தில் பெண்கள் பிரச்சனைகளை அடிப்படையாக வைத்து அதிகப் படங்களை உருவாக்கியவர் என்ற பெருமைக்குரிய இயக்குனரும் இவரே.

சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் அடக்குமுறைகளையும், கொடுமைகளையும் எதிர்த்து நிற்கும் போர்க்குணம் பெண்களுக்கு வேண்டும் என்பதை தன் திரைப்படங்கள் வாயிலாக சமுதாயத்திற்கு பெண் விடுதலை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தியவர்.

தன் திரைப்படத்தில் பெண்களை ஆண்களின் போகப் பொருளாகக்காட்டாமல், வீரமிக்க, எழுச்சி மிக்க கதைமாந்தர்களாகப் படைத்திருப்பார். பெண்களுக்கு என்று ஓர் இதயம் இருக்கிறது, உணர்ச்சி இருக்கிறது, வாழ்க்கைக்கான தேடல் இருக்கிறது என்பதை சமூகத்திற்கு திரையிட்டுக் காட்டியவர். இயக்குனர் கே. பாலச்சந்தர்

கே பாலச்சந்தர் இயக்கத்தில் வெளிவந்த "அவள் ஒரு தொடர்கதை" திரைப்படத்தில்,கதாநாயகி குடும்பத்திற்காக உழைத்து, உழைத்து திருமணம் கூட செய்து கொள்ளாமல் சுமைதாங்கியாக வாழ்ந்து வருகிறாள். பிறர் நலனுக்காக தன்னை இயந்திர பாக்கி கொண்டு உழைக்கும் பெண்களின் உள்ளக்குமறள்களை திரையிட்டுக் காட்டிய இருப்பார். "அரங்கேற்றம்" - எனும் திரைப்படத்தின் கதாநாயகி குடும்ப வறுமையை போக்குவதற்காகவும், தன் உடன்பிறந்தோரின் ஆசைகளை நிறைவேற்றுவதற்காகவும் அலுவலகத்தில் வேலைக்குச் செல்கிறாள். அங்கே அவளின் மேலதிகாரியால் பாலியல் கொடுமைக்கு ஆளாகிறாள் பின் விலைமாதர் ஆகிறாள் இவளின் இந்த நிலையை அறிந்த இவளின் குடும்பம் அவளை வெறுத்து ஒதுக்குகிறது. பின் கதாநாயகி மனநோயாளி ஆகிறாள். அக்காலக்கட்டத்தில் இத்திரைப்படம் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

"அவர்கள்"திரைப்படத்தில் தாலி கட்டியதால் மட்டுமே தன்னை அடிமையாக்கி, அணு அளவும் இரக்கமின்றி, தினமும் தன்னைக் குத்திக் காட்டி குறை கூறும் கணவனை தூக்கியெறிந்து விட்டு, அவன் கட்டிய தாலியை உண்டியலில் போட்டுச்செல்லும் புதுமைப் பெண்ணாகப் படைத்திருப்பார் இயக்குனர். " மூன்று முடிச்சு " என்ற திரைப்படத்தில் தன் காதலனைக் கொன்றவனை பழிவாங்கும் பொருட்டு அவனுடைய தந்தையை மணந்து அவனுக்கு சித்தியாக வந்து அதிர்ச்சி தரும் பெண்ணாக செல்வி என்ற கதாப்பாத்திரத்தைப் படைத்திருப்பார்

பெண்ணியம் சார்ந்த இயக்குனரின் திரைப்பட வரிசையில் உச்சம் தொட்ட திரைப்படம்"அக்னி சாட்சி " என்ற திரைப்படமாகும் இத்திரைப்படத்தில் கண்ணம்மா என்னும் கதாப்பாத்திரம் இன்றளவும் பெண்கள் மத்தியில் பெண்ணியம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் திரைப்படமாக அக்காலகட்டத்தில் பேசப்பட்டு வந்தது. மற்ற திரைப்படத்தில் உள்ள பெண் கதாபாத்திரங்களுக்கு துணிச்சல், பெண்ணுரிமை சார்ந்த விழிப்புணர்வு, சமுகக்கோபம் போன்ற குணாதிசயங்கள் இருந்தன. ஆனால்"அக்னி சாட்சி " - வரும் கண்ணம்மா பிரத்யேகமானவள்.

கூர்மையான நுண்ணறிவும், கலை ரசனையும், கவிதைத்திறனும் கொண்டவள். ஆணாதிக்க கொடுமை களில் பல நூற்றாண்டுகளாக சிக்கித் தவிக்கும் பெண் குலத்தின் முக்கியப்படைப்பு எனலாம். பெண்கள் தங்களின் மனக் குமறல்களை வெளியே சொல்லாமல் மெல்ல, மெல்ல மனநோயாளியாக மாறி விடுகிறார்கள். தன் மனக்குமறல்களை மனதினுள் மறைத்து வைக்காமல் ஒரு பெண் ஆவேசமாக வெளிப்படுத்தனால் எப்படி இருக்கும் என்பதை "அக்னி சாட்சி" கண்ணம்மா கதாபாத்திரத்தை படைத்துள்ளார்

"அக்னி சாட்சி"-திரைப்படம் பெண்கள் மட்டுமின்றி ஆண்களும் அவசியம் காண வேண்டிய ஒரு திரைப்படமாக அமைந்தது பெண்களின் மனங்களைப் புரிந்து கொண்டு, ஆண்கள் பெண்களை அரவணைத்துச் செல்லவேண்டும் என்ற கருத்தினை சமுதாயத்திற்குஎடுத்துக்கூறும் விதமாக அமைந்துள்ளது.

"கல்யாண அகதிகள்" என்ற திரைப்படத்தில் ஏழு பெண்கள் திருமணத்திற்கு பிறகு வரதட்சிணைக் கொடுமையால் அவர்கள் பட்ட இன்னல்களை விளக்கும் படமாகவும், அதிலிருந்து அவர்கள்

விடுபட்டு ஆண் துணையின்றி பெண்கள் வாழ முடியும் என்பதைக் காட்டும் திரைப்படமாகவும் அமைந்துள்ளது.

முடிவுரை:

தமிழ்த்திரையுலகில் பெண்களைப் பற்றியும், பெண்களின் பிரச்சனைகள் குறித்தும் ஒரு சகோதரனாய், ஒரு தந்தையாய் தன் திரைப்படங்கள் வாயிலாக சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டி, பெண்ணியம் பேசியவர் இயக்குனர் கே. பாலசச்சந்தர் அவர்கள். இன்று பெரிதாக விவாதங்களுக்கு உள்ளாகும் பெண்ணியம் சார்ந்த விஷயங்களை 1980_களிலேயே பெண்களின் உள்ளத்து உணர்வுகளையும், அவர்களின் , சமூக கோபங்களையும் திரையில் வெளியிட்டு வெற்றி கண்டவர்.

-----------------------------------